[2021] 10 எஸ்.சி.ஆர் 1061

சுரிந்தர் சிங்

எதிர்

மாநிலம் (சண்டிகர் யூனியன் பிரதேசம்)

(குற்றவியல் மேல்முறையீட்டு எண். 2373/2010)

நவம்பர் 26, 2021

முன்னிலை

[மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு. என். வி. ரமணா,

மாண்புமிகு நீதியரசர் திரு.சூர்யா காண்ட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ. எஸ். போபண்ணா]

இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 307 – கொலை முயற்சி – மேல்முறையீட்டாளர் – தலைமை காவலர் பிரிவு 307 மற்றும் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27–ன் கீழ் குற்றவாளி, இரண்டு குற்றங்களுக்கும் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது – மேல்முறையீட்டில், தீர்வு: மேல்முறையீட்டாளர் புகார்தாரரின் குடியிருப்பு அலுவலகத்தில் நுழைந்தபோது மது போதையில் இருந்தார் – தண்ணீர் குடித்த பிறகு, அவர் தனது துப்பாக்கியை வெளியே எடுத்து புகார்தாரரை நோக்கி

குறிவைத்தார், அதன்பின் அ.சா–3 மற்றும் அ.சா–4 ஆகியோரை அறையிலிருந்து வெளியேறச் சொன்னார் – மத்திய தடயவியல் அறிவியல் ஆய்வகத்தின் (CFSL/மதஅஆ) அறிக்கை புகார்தாரரின் அலுவலகத்தில் இருந்து மீட்கப்பட்ட தோட்டா மேல்முறையீட்டாளரிடமிருந்து மீட்கப்பட்ட பணித் துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டது என்பதை நிரூபிக்கிறது – இருப்பினும், அரசு தரப்பு மேல்முறையீட்டாளருக்கு புகார்தாரரை கொல்ல விரும்புவதற்கான எந்த உள்நோக்கத்தையும் நிருப்பிக்க தவறிவிட்டது, இருப்பினும், உள்நோக்கம் இல்லை என்பது மட்டும் மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நீக்க முடியாது – பிரிவு 307 இன் கீழ் தண்டனையானது முழுமையாக நியாயப்படுத்தப்படுகிறது – இருப்பினும், ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது 7–ன் கீழ் தவறான நடத்தை நிரூபிக்கப்படாவிட்டால், உரிமம் பெற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆயுதத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது மட்டும் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படாது – மேல்முறையீட்டாளருக்கு பிரிவு 27, ஆயுதச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் சிறையானது ரத்து செய்யப்பட்டது – மேலும், சம்பவம் 1999 இல் நடந்தது – நீண்ட காலம் கடந்து சென்றதாலும், சம்பவத்திற்கு முன்னும் பின்னும் மேல்முறையீட்டாளரின் பதிவில் உள்ள நேர்மையான நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, பிரிவு 307–ன் கீழ் விதிக்கப்பட்ட தண்டனை ஏற்கனவே அனுபவித்த காலத்திற்கு களிக்கப்பட்டது – ஆயுதச் சட்டம், 1959 – பிரிவுகள் 5,

7, 27 – ஆயுத திருத்தச் சட்டம், 1988 – இந்திய அரசியலமைப்பு – ஷரத்துகள் 14, 136.

இந்திய அரசியலமைப்பு – ஷரத்து 136 – அதன் அதிகாரங்கள் – குற்றவழக்கு மேல்முறையீடுகளில் செயல்படுத்துதல் – விவாதிக்கப்பட்டது.

தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 307 – கூறுகள் – தீர்வு : பிரிவு 307–ன் கீழ் குற்றத்தை ஏற்படுத்துவதற்கு கருதப்படும் இரண்டு கூறுகள், முதலாவது, குற்றவாளியிடம் பாதிக்கப்பட்டவருக்கு மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் அல்லது அறிவு மற்றும் இரண்டாவதாக, பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும், அத்தகைய நோக்கம் அல்லது அறிவின் தொடர்ச்சியாக வெளிப்படையான கருத்தினைக் காட்டும் செயல்களைச் செய்திருக்க வேண்டும்.

குற்றவியல் சட்டம் – சான்று – உள்நோக்கம் – பிரிவு 307, இ.த.ச கீழ் குற்றம் – உள்நோக்கம் இல்லாமை – மரணம் ஏற்படாத போது – விவாதிக்கப்பட்டது – தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 307.

ஆயுதச் சட்டம், 1959 – பிரிவுகள் 5, 7, 27 – திருத்தத்திற்கு முன் மற்றும் திருத்தத்திற்குப் பின் – தீர்ப்பளிக்கப்பட்டது: திருத்தத்திற்கு முன், பிரிவு 27 எந்தவொரு 'சட்டவிரோத நோக்கத்திற்காகவும்' ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதை தண்டித்தது – இருப்பினும், திருத்தத்திற்குப் பிறகு, பிரிவு 27 என்பது பிரிவு 5 அல்லது 7–ன் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் மீறலுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, மேலும் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதற்கான 'சட்டவிரோத நோக்கம்' இனி தவறான நடத்தையின் பிரிக்க முடியாத கூறு அல்ல – ஆயுதங்கள் (திருத்தம்) சட்டம், 1988.

தண்டனை/தண்டனை வழங்குதல் – தண்டனையின் அளவு – விகிதாச்சாரத்தின் கோட்பாடு – தண்டனை குறைப்பு – விவாதிக்கப்பட்டது – இந்திய அரசியலமைப்பு – ஷரத்து 14.

இந்நீதிமன்றம் மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்து, கீழ்கண்டவாறு தீர்வு செய்தது.

தீர்வு: 1. அரசியலமைப்பின் பிரிவு 136–ன் கீழ் விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், சிறப்பு அனுமதி மூலம் குற்றவழக்கு மேல்முறையீட்டில் அத்தகைய அதிகாரங்களை வேண்டுகோள் செய்யும் போது, சில விதிவிலக்கான சூழ்நிலைகள்

தவிர, இந்த நீதிமன்றம் பொதுவாக சாட்சியங்களை மீண்டும் மதிப்பீடு செய்வதில் ஈடுபடாது, மேலும் பொருண்மை குறித்த ஒரே நேரத்தில் கண்டறிதல் இருக்கும் போது சாட்சிகளின் நம்பகத்தன்மையை சந்தேகிக்கும். [பத்தி 17] [1071 – ஏ – பி]

2.1 இதச பிரிவு 307 இன் கீழ் குற்றச்சாட்டை ஏற்படுத்துவதற்காக, நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு கூறுகள் உள்ளன, முதலாவது, பாதிக்கப்பட்டவருக்கு மரணத்தை ஏற்படுத்த குற்றவாளிக்கு ஏதேனும் நோக்கம் அல்லது அறிவும் இருந்ததா என்பது, இரண்டாவதாக, பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும் அத்தகைய விளைவைப் பொருட்படுத்தாமல், அத்தகைய நோக்கம் அல்லது அறிவின் தொடர்ச்சியாக சில வெளிப்படையான செயல்கள் இருந்தன. நீதிமன்றங்கள் குற்றவாளியின் நடத்தை மற்றும் குற்றத்தின் சூழ்நிலைகளிலிருந்து, பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் தன்மை அல்லது காயத்தின் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய அத்தகைய நோக்கத்தை ஊகிக்கலாம். சம்பவம் நடந்த விதம் பாதிக்கப்பட்டவரின் விவேகமான தவிர்த்தலை விட அதிகமாக விளக்கலாம். எனவே, இ.த.ச பிரிவு 307 ஐ ஈர்ப்பதற்காக இதனால் பாதிக்கப்பட்டவர் தனது உயிருக்கு ஆபத்தான காயத்தை அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை. [பத்தி 20] [1072–இ–ஜி]

2.2 'உள்நோக்கம்' என்பது 'நோக்கம் மற்றும் வாய்ப்பு' போலல்லாமல் செயலுக்கு ஊக்கம் அளித்தல் அல்லது தூண்டுவதில் வேறுபட்டது. 'நோக்கம்' போலல்லாமல், 'உள்நோக்கம்' என்பது குற்றத்தின் அளவுகோல் அல்ல. தீய நோக்கத்துடன் செய்யப்படும் சட்டப்பூர்வமான ஒரு செயல் குற்றத்தை ஏற்படுத்தாது, ஆனால் நல்ல நோக்கத்துடன் சட்டவிரோதமான செயல் செய்யப்பட்டால் அது அவ்வாரு இருக்காது. உள்நோக்கம் ஒரு முக்கியமான காரணியாக இருந்தாலும், ஒரு குற்றத்தைச் செய்வதற்கு அது கணிசமான காரணியாக இருந்தாலும், அது இல்லை என்பது அரசுத் தரப்பு வழக்குக்கு ஆபத்தானது என்று கருதக்கூடிய ஒரு மிகச்சிறந்த கூறு அல்ல, குறிப்பாக நேரில் பார்த்த சாட்சிகளின் சான்றுகள் மற்றும் அனைத்து காரணிகளும் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நோக்கி சுட்டிக்காட்டும் பட்சத்தில் அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுகின்றன. [பத்தி 22,24][1073–ஏ–பி, இ–எஃப்]

3. அரசு தரப்பு புகார்தாரரை மேல்முறையீட்டாளர் கொலை செய்வதற்க்கான எந்த உள்நோக்கத்திற்க்கான காரணத்தையும் கூறத் தவறிவிட்டது, இருப்பினும், உள்நோக்கம் இல்லை என்பது மட்டுமே மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நீக்காது. மேல்முறையீட்டாளரின் நடத்தை அவரது நடவடிக்கை புகார்தாரரை தீர்த்துகட்டுவதை நோக்கமாகக் கொண்டது என்றும்,

இ.த.ச பிரிவு 307 இன் கீழ் அவரது தண்டனை முற்றிலும் நியாயமானது என்றும் கருதுவதற்கு மேல்முறையீட்டாளரின் நடத்தை போதுமானது என்று இரண்டு நீதிமன்றங்களின் ஒருங்கிணைந்த கண்டுபிடிப்புகளுடன் இந்த நீதிமன்றம் ஒத்துபோகின்றது. சம்பவம் நடந்த இடத்தில் மேல்முறையீட்டாளர் இருந்ததயோ அல்லது அவரது பணித் துப்பாக்கி மூலம் தோட்டா சுடப்பட்டது என்ற பொருண்மையை மேல்முறையீட்டாளர் மறுக்கவில்லை. (CFSL/மதஅஆ) அறிக்கை (அ.சா.ஆ–13/அ) புகார் அளித்தவரின் அலுவலகத்தில் இருந்து மீட்கப்பட்ட தோட்டா மேல்முறையீட்டாளரிடம் இருந்து மீட்கப்பட்ட பணி துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டது என்பதை நிரூபிக்கிறது. மருத்துவ – சட்ட அறிக்கை (சான்றாவணம் – ஜே எம்எல்ஆர்) மற்றும் சம்பவம் நடந்த நாளில் மேல்முறையீட்டாளரை பரிசோதித்த மருத்துவரின் சாட்சியம் (அ.சா–7) ஆகியவை கண்ணுற்ற சாட்சிகளான புகார்தாரர் (அ.சா–2), அவரது எழுத்தர் (அ.சா–3) மற்றும் அவரது சுருக்கெழுத்தாளர் (அ.சா–4) ஆகிய அனைவரும் தங்கள் தனிப்பட்ட சாட்சியங்களில் மேல்முறையீட்டாளர் புகார்தாரரின் குடியிருப்பு அலுவலகத்தில் நுழைந்தபோது மது போதையில் இருந்ததாக, கூறியதை உறுதிப்படுத்துகிறது. தண்ணீர் குடித்த பிறகு, மேல்முறையீட்டாளர் தனது துப்பாக்கியை வெளியே எடுத்து புகார்தாரரை நோக்கி குறி வைத்ததாகவும் அதன்பிறகு, அவர் அ.சா–3 மற்றும் அ.சா–4 ஆகியோரை அறையிலிருந்து வெளியேறச் சொன்னதாகவும், புகார்தாரரும் அ.சா–4 ஆகியோர்

தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர். தாக்குதலுக்காக உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதம் ஒரு அரை–ஏற்றி/அரை–தானியங்கி கைத்துப்பாக்கி, இது குறிப்பாக உரையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு புகார்தாரரை நோக்கி குறிவைக்கப்பட்டது. அரை தானியங்கி கைத்துப்பாக்கியை ஒரு தோட்டாவை சுடும் நிலைக்கு கொண்டு வர, முதல் முறையாக அக்கைத்துப்பாக்கியின் அமைப்பை கையால் பின்னோக்கி இழுப்பதன் மூலம் அதனை சுடும் பயன்முறைக்கு கொண்டு வர வேண்டும் என்று அ.சா–13 அவரது குறுக்கு விசாரணையில் தெளிவாக கூறினார். மேலும், துப்பாக்கி மேல்முறையீட்டாளரால் சுடப்பட்டது என்று புகார்தாரரும் அ.சா–4 ம் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக கூறினார். அவர் தலையிடாமல், மேல்முறையீட்டாளரின் கையைப் பிடிக்காமல் விட்டிருந்தால், அவரது முகத்தில் குறிவைக்கப்பட்ட துப்பாக்கி அவரது முகத்தை நோக்கி சுட்டிருக்கும் மற்றும் துரதிர்ஷ்டவசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என்பது புகார்தாரரின் தரப்பு/வாதம். மேல்முறையீட்டாளரின் மாற்று தரப்பு/வாதமான, அவர் தனது தோட்டாக்கள் ஏற்றப்பட்ட துப்பாக்கியை உரையிலிருந்து வெளியே எடுத்து, புகார்தாரரின் மேசையில் வைத்து, புகார்தாரர் விரும்பியபடி அதைச் சுற்றி விளையாட அனுமதித்தது நம்பமுடியாததாகத் தெரிகிறது. [பத்தி 25, 26] [1073–ஜி–எச்; 1074–ஏ–எச்; 1075–ஏ]

4. ஆயுதங்கள் (திருத்தம்) சட்டம், 1988 மூலம் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 திருத்தப்படுவதற்கு முன், மேற்கூறிய விதி எந்தவொரு 'சட்டவிரோத நோக்கத்திற்காகவும்' ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதை தண்டனைக்குரிய குற்றமாக கருதியது. இருப்பினும், அதன் திருத்தத்திற்குப் பிறகு, ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 ஆனாது, ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது 7-ன் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் மீறலுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது, மேலும் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சட்டவிரோத நோக்கத்திற்காக பயன்படுத்துவது 'இனி தவறான நடத்தையின் பிரிக்க முடியாத கூறு அல்ல. சம்பவம் நடந்த நேரத்தில் மேல்முறையீட்டாளர் ஒரு காவல் அதிகாரியாக இருந்தார், மேலும் குற்றத்தைச் செய்ய பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், அதிகாரமுள்ள அதிகாரியால் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் அவரது வசம் வைக்கப்பட்டன. மேல்முறையீட்டாளர் ஆயுதத்தின் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளராக இருந்ததால், ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5-ன் கீழ் தடைசெய்யப்பட்டபடி உரிமம் பெறாத ஆயுதத்தைப் பயன்படுத்தியதாக கூற முடியாது. உரிமம் பெற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆயுதத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது, ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது 7-ன் கீழ் தவறான நடத்தை நிரூபிக்கப்படாவிட்டால் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படாது. அதிகபட்சமாக, இது பணி விதிகளின் கீழ் ஒரு 'தவறான நடத்தை' ஆக இருக்கலாம்,

ஆனால் அது நீதிமன்ற விசாரணையில் தீர்மானிப்பது அல்ல. மேல்முறையீட்டாளர் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27-ன் கீழ் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார். [பத்தி 29-31][1076-சி-எச்]

5.1 இரண்டு கொள்கைகளுக்கிடையேயான விகித சமநிலை என்பது இப்போது விகிதாசாரக் கோட்பாடு என்று நன்கு அறியப்படுகிறது. நமது குற்றவியல் நீதித்துறை அமைப்பின் தண்டனை கொள்கையின் அடித்தளமும் விகித சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தண்டனை வழங்குவதில் பாரபட்சமான நடைமுறைகளை அகற்றும் வகையில் அனைவரையும் சமமான நடத்துவது, விகிதாச்சாரத்தின் கோட்பாடுகளுக்கு இன்றியமையாதது. தண்டனை தொடர்பான விவகாரத்தை தீர்மானிக்கும் போது ஒரு அளவுக்கான சுதந்திரம் உள்ளது, இருப்பினும், அதை அடிப்படையில்லாமல் பயன்படுத்த முடியாது. இந்த நீதிமன்றம் அளவுக்கு மீறிய தண்டனைகள் வழங்கும் பழக்கத்தை, குறிப்பாக தேவையற்ற தளர்வை வெளிப்படுத்தும் தண்டனைகளை, முறையாக நிராகரித்துள்ளது, ஏனெனில் இது சட்டத்தின் செயல்திறன் மீது பொதுமக்களின் நம்பிக்கையை குறைக்கும். தண்டனையின் அளவை தீர்மானிக்கும்போது முதன்மையான கவனம் குற்றத்தின் தீவிரத்துக்கோ அல்லது தண்டனை அளவிற்கோ இருக்க வேண்டும். எனினும், தண்டனையை குறைக்க ஏதுவான

காரணங்களை மதிப்பீடு செய்வது போன்ற புனர்வாழ்வு/மருவாழ்வு நீதிமுறையின் மற்ற முக்கிய கூறுகள் நீதிமன்றத்தின் சுதந்திர வரம்புகளுக்குள் உட்பட்டு கவனிக்கப்பட வேண்டியது முக்கியம். [பத்தி 32–34] [1077– பி, டி–எச்]

ஆண்ட்ரூ ஆஷ்வர்த், தண்டனை மற்றும் குற்றவியல் நீதிச்செயல் **(5 வது பதிப்பு, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் 2010) – மேற்கோள் காட்டப்பட்டது.**

5.2 மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை, அவர் செய்த குற்றத்திற்கு ஏற்றதாக இல்லை. மேல்முறையீட்டாளரை அவரது வாழ்க்கையின் இந்த கட்டத்தில் கடுங்காவல் சிறைதண்டனைக்கு அனுப்புவது பின்வரும் தணிக்கும் காரணங்களால் நீதியை நிலைநாட்டாது: இந்த வழக்கில், அரசு தரப்பு குற்றம் மேல்முறையீட்டாளரால் தூண்டுதலின் பேரில் செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் குறிக்கின்ற வகையில் மேல்முறையீட்டாளருக்கு புகார்தாரரை கொல்ல விரும்புவதற்கான எந்த உள்நோக்கத்தையும் அல்லது திட்டமிடலின் கூறுகளையும் காரணம் கூறவில்லை; காயத்தின் தன்மை இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 307 இன் கீழ் உகந்ததாக இல்லாமல் இருந்தாலும், தண்டனை வழங்கும் போது நீதிமன்றம் அதை கருத்தில் கொள்ளலாம் ; மேல்முறையீட்டாளர்

செய்த குற்றம், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 307 இல் முழுமையாக உள்ளடங்குகிறது, ஆனால் அதிர்ஷ்டவசமாக புகார் செய்தவர் அல்லது வேறு யாரும் மேல்முறையீட்டாளரின் தவறான செயலால் காயமடையவில்லை. நீண்ட காலம் கடந்திருப்பதுடன், சம்பவத்துக்கு முன்பும் பின்னும் பதிவு செய்யப்பட்ட நல்ல நடத்தை என்பது நிச்சயமாக தண்டனையை குறைப்பதற்க்கான ஒரு காரணியாகும்; மதுமயக்கத்தில் நடந்த இந்த குறிப்பிட்ட சம்பவத்தைத் தவிர, மேல்முறையீட்டாளர் பணியில் நன்மதிப்பு பதிவு பெற்றிருந்தார்; இறுதியாக, மேல்முறையீட்டாளர் 1999 இல் இடைநீக்கம் செய்யப்பட்டு, மேலும் 2007 இல் பணிநீக்கம் செய்யப்பட்டார். இது தண்டனைக்குறைப்பிற்கான ஒரு நியாயமான காரணியாகும், ஏனெனில் பணிநீக்கம் மற்றும் அதன் விளைவாக சமூக பாதுகாப்பு நலன்கள் இழப்பு, ஓய்வூதியம் போன்றவை சமூகத்தில் தண்டனையின் ஒரு வடிவமாகவும் கருதப்படுகிறது. மேல்முறையீட்டாளருக்கு ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27-ன் கீழ் வழங்கப்பட்ட குற்றம் மற்றும் தண்டனை ரத்து செய்யப்பட்டபோதிலும், இ.த.ச-வின் பிரிவு 307 கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லத்தக்கதாகும். ஏற்கனவே அவர் சிறையில் இருந்த காலத்தை கணக்கீட்டு, இதச பிரிவு 307 இன் கீழ் விதிக்கப்பட்ட தண்டனையானது குறைக்கப்பட்டது. [பத்தி 35, 36][1078-பி-எஃப், எச்; 1079-ஏ-இ]

மத்தியப் பிரதேச மாநிலம் எதிர் சலீம் @ சாமரு மற்றும் பிறர். (2005) 5 எஸ்சிசி 554 : [2005] 1 சப்ளி. எஸ்சிஆர் 562; *சிவாஜி ஜெனு மோஹிதே எதிர் மகாராஷ்டிரா மாநிலம்* (1973) 3 எஸ்சிசி 219; *பிபின் குமார் மொண்டல் எதிர் மேற்கு வங்காள மாநிலம்* (2010) 12 எஸ்சிசி 91: [2010] 8 எஸ்சிஆர் 1036 – நம்பியிருந்தது.

மத்தியப் பிரதேச மாநிலம் எதிர் காஷிராம் மற்றும் பலர். (2009) 4 எஸ்சிசி 26: [2009] 1) எஸ்சிஆர் 806 ; *ஜாகே ராம் மற்றும் பலர். எதிர் ஹரியானா மாநிலம்* (2015) 11 எஸ்சிசி 366: [2015] 11 எஸ்சிஆர் 1004; *மத்தியப் பிரதேச மாநிலம் எதிர் கன்ஹா @ ஓம் பிரகாஷ்* (2019) 3 எஸ்சிசி 605 : [2019] 1 எஸ்சிஆர் 1074 – குறிப்பிடப்பட்டது.

<u>வழக்கின் சட்டக் குறிப்புகள்</u>

[2005] 1 சப்ளி. எஸ்சிஆர் 562	நம்பியிருந்தது	பத்தி 18
[2009] 1 எஸ்சிஆர் 806	குறிப்பிடப்பட்டது	பத்தி 19
[2015] 11 எஸ்சிஆர் 1004	குறிப்பிடப்பட்டது	பத்தி 19
[2019] 1 எஸ்சிஆர் 1074	குறிப்பிடப்பட்டது	பத்தி 19
[2010] 8 எஸ்சிஆர்	நம்பியிருந்தது	பத்தி 23

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீட்டு எண். 2373/2010.

சண்டிகரிலுள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீட்டு எண். 1564B/2006 இல் 19.05.2010 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர்கள் ஜஸ்பீர் சிங் மாலிக், திருமதி.வி. உஷா நந்தினி ஆகியோர் ஆஜராகினர்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர்கள் மன்ப்ரீத் சிங் தோபியா, அனில் குமார், சுதர்சன் சிங் ராவத் ஆகியோர் ஆஜராகினர்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. சூரிய காண்ட் அவர்களால் பகரப்பட்டது.

1. மேல்முறையீட்டாளர் – சுரீந்தர் சிங் அவர்களுக்கு சண்டிகரின் கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதியால் 25 ஜூலை 2006 தேதியிட்ட அவரது குற்றத் தீர்ப்பு மற்றும் சிறைதண்டனை ஆகியவற்றை உறுதி செய்த பஞ்சாப் & ஹரியானா உயர் நீதிமன்றத்தின் 19 மே 2010 தேதியிட்ட தீர்ப்பை சவால் செய்துள்ளார். இந்திய தண்டனைச் சட்டம், 1860 (இனி 'இதச') பிரிவு 307 மற்றும் ஆயுதச் சட்டம், 1959 (இனி, 'ஆயுதச் சட்டம்') பிரிவு 27 ஆகியவற்றின் கீழ் மேல்முறையீடு செய்தவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, இருகுற்றங்களுக்கும் தண்டனைகள் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்ற குறிப்புடன் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சங்கதிகள்:

2. சுருக்கமான அரசு வழக்கு என்னவென்றால், 10 ஜூலை 1999 அன்று, வழக்குரைஞர் மன்சூர் அலி, (புகார்தாரர்) அவரது குமாஸ்தா/எழுத்தர் மலேர் சிங்குடன் (அ.சா–3), அவரது குடியிருப்பு அலுவலகத்தில் அமர்ந்து, அவருடைய சுருக்கெழுத்தருக்கு, ஆர்.கே. சூட் (அ.சா–4) க்கு உத்தரவுகளை வழங்கிக்கொண்டிருந்தார். அன்று மாலை சுமார் 5:30 மணியளவில், அப்போது சண்டிகர் காவல்துறையில் தலைமைக் காவலராக இருந்த மேல்முறையீட்டாளர், குடிபோதையில் புகார்தாரரின் குடியிருப்பு அலுவலகத்திற்குள் நுழைந்து, தான் இந்த பகுதியின் ரோந்து காவல் அதிகாரி என்று கூறி, ஒரு

குவளைத் தண்ணீர் கேட்டார். பின்னர் அவர் புகார்தாரரின் குறுக்கே அமர்ந்து, பல்பீர் சிங் (அ.சா–5) அவருக்கு வழங்கிய தண்ணீரை குடித்த பிறகு, தனது பணி துப்பாக்கியை எடுத்து, புகார்தாரரை நோக்கி துப்பாக்கியை காட்டி மிரட்டினார், அதாவது *"இந்த துப்பாக்கியில் 10 தோட்டாக்கள் உள்ளன, நான் இன்று 10 பேரைக் கொலை செய்யப்போகிறேன்.* மேல்முறையீட்டாளர் புகார்தாரரை எழுந்து நின்று கைகளை உயர்த்தும்படி கூறினார். அதே நேரத்தில், அவர் மலேர் சிங்கையும், ஆர்.கே.சூட்டையும் அலுவலகத்திற்கு வெளியே போகச் சொன்னார், அதன்படி அவர்கள் அதற்கு இணங்கினார்கள். இதற்கிடையில், மேல்முறையீட்டாளர் மேஜையைச் சுற்றி நகர்ந்து, புகார்தாரரை நோக்கி, நெம்புகோலை இழுத்து, அவர் சுடத் தயாராகிக்கொண்டார். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, புகார்தாரர் மேல்முறையீட்டாளர் மீது பாய்ந்து, அவரது கையை கூரையை நோக்கித் தள்ளினார், இதன் விளைவாக தோட்டா, துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டு, அலுவலகத்தின் கூரையைத் தாக்கியது.

3. மேல்முறையீட்டாளர் இரண்டாவது முறையாக துப்பாக்கிச் சுட முயன்றார், இருப்பினும், அவரால் முடியவில்லை. மேலும் அதனை செயல்படுத்த முயன்றபோது அவரது கைத்துப்பாக்கியில் இருந்து ஒரு தோட்டா விழுந்தது. அந்த நேரத்தில், வீட்டிலிருந்த பெண்கள் அலுவலகத்திற்குள் நுழைந்து பயத்தால் கூச்சலிட

ஆரம்பித்தனர். பீதியடைந்த மேல்முறையீட்டாளர் அவரது கம்பியில்லா செட்டை புகார்தாரரின் மேஜையிலும், அவரது இருசக்கர வாகனத்தை புகார்தாரரின் வீட்டிற்கு வெளியேவும் விட்டுவிட்டு அலுவலகத்தை விட்டு வேகமாக வெளியேறினார். புகார்தாரருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. பின்னர் சம்பவம் குறித்து காவல்துறைக்கு புகார் செய்யப்பட்டது. தகவல் கிடைத்ததும், சுமார் 10 முதல் 15 நிமிடங்களுக்குப் பிறகு, காவல்துறை அதிகாரிகள் புகார்தாரரின் வீட்டிற்கு வந்து, மேல்முறையீட்டாளர் மீது மு.த.அ பதிவு செய்தனர். அதன் பிறகு, காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கையை தொடங்கியதால், மேல்முறையீட்டாளரை கைது செய்த உதவி ஆய்வாளர் ரமேஷ் சந்த் (அ.சா–6) அவர்கள் மஸ்ஜித் அருகே உள்ள வட்டப்பகுதி – 20 ஏ என்ற இடத்தில் கைது செய்தப்போது, மேல்முறையீட்டாளர் தற்போதுவரை கையில் துப்பாக்கியுடன் இருந்தார். மேல்முறையீட்டாளர் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அங்கு அவர் சிறுநீர் அல்லது இரத்த மாதிரிகளை கொடுக்க மறுத்துவிட்டார்.

4. மேற்கூறிய சங்கதிகளின் வெளிச்சத்தில் விசாரணை நடத்தப்பட்டது, மேலும் கணிசமான ஆதாரங்களை சேகரித்த பிறகு, மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு சண்டிகரில் உள்ள கூடுதல் அமர்வு

நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் மீது இதச பிரிவு 307 மற்றும் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 இன் கீழ் குற்றச்சாட்டுகள் வணையப்பட்டன. மேல்முறையீட்டாளர் தனது குற்றத்தை மறுத்து விசாரணையை கோரினார்.

5. இறுதி நீதிமன்ற விசாரணையில், மொத்தம் 14 சாட்சிகள் அரசுத் தரப்பால் விசாரிக்கப்பட்டனர் மற்றும் 3 சாட்சிகள் எதிர் தரப்பால் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பு வழக்கு, சம்பவம் நடந்த இடத்தில் இருந்த நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் புகார்தாரரின் (அ.சா–2) இன் வாக்குமூலங்களை பெரிதும் நம்பியிருந்தது. மேலும் அவர்கள் மு.த.அ இல் உள்ள சம்பவத்தின் நிகழ்வுகளை தனது வாக்குமூலத்தில் ஆதரித்தார். புகார்தாரர் நேர்மையாக சாட்சியம் அளித்து, மேல்முறையீட்டாளர் தன் அருகில் வராமல், அமர்ந்திருக்கும் போது சுடாமல் இருந்திருந்தால், மேல்முறையீட்டாளரை தன்னால் தடுக்க முடியாது என்று ஒப்புக்கொண்டார். மேல்முறையீட்டாளர் தன்னை நோக்கி வரும் போது நெம்புகோலை இழுத்து தனது முகத்தை குறிவைத்து துப்பாக்கிச் சூடுவதற்க்கு துப்பாக்கியைக் கொண்டு வந்ததாகவும், இது நிலைமையின் தீவிரத்தை தனக்கு உணர்த்தியதாகவும் புகார்தாரர் திட்டவட்டமாக கூறினார். அதேபோல், ஆர்.கே.சூட் (அ.சா–4) புகார்தாரரின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்தினார், அதாவது அலுவலகத்திற்கு வெளியே உள்ள தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, அளி கம்பி பின்னல் கதவு வழியாக

மேல்முறையீட்டாளர் சுட்டதை தான் பார்த்ததாக சாட்சியம் கூறினார். மலேர் சிங் (அ.சா–3), சுடப்பட்டதைக் காணவில்லை என்று கூறினாலும், மேல்முறையீட்டாளர் குடிபோதையில் இருந்ததாகவும், அ.சா–4 உடன் தாழ்வாரத்தில் இருந்தபோது அவர் சுடப்பட்டதைக் கேட்டதாகவும் சான்றளித்தார்.

6. மேல்முறையீட்டாளர் உதவி ஆய்வாளர் ரமேஷ் சந்தால் (அ.சா–6) கைது செய்யப்பட்ட பிறகு, மருத்துவர் பிதி சந்த் (அ.சா–7), சம்பவத்தன்று இரவு 7:20 மணிக்கு மேல்முறையீட்டாளரை பரிசோதித்தார். அவர் 10 ஜூலை 1999 தேதியிட்ட மருத்துவ சட்ட அறிக்கையை ஒப்புக்கொண்டதுடன் (சான்றாவணம் ஜே எம்எல்ஆர்), மேலும் மருத்துவ பரிசோதனையில், மேல்முறையீட்டாளர் மது போதையில் இருந்தது கண்டறியப்பட்டதாக சாட்சியம் அளித்தார்.

7. திரு. பி. பதானியாவின் (அ.சா–13) அறிக்கையும் சில முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. மத்திய தடயவியல் அறிவியல் ஆய்வகத்தின் (சுருக்கமாக 'சி.எஃப்.எஸ்.எல்') அறிக்கையில் (அ.சா–13/ஏ), தடயவியல் ஆய்விற்கு பின்னர், புகார்தாரரின் குடியிருப்பு அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெற்று தோட்டாக்கள், மேல்முறையீட்டாளர் பயன்படுத்திய துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளதை

சார்ந்திருப்பதாக இந்த நீதிமன்றத்தின் முன் பரிசோதிக்கப்பட்ட சாட்சி வாக்குமூலம் அளித்தார். மேல்முறையீட்டாளரால் பயன்படுத்திய ஆயுதம் போன்ற அரை தானியங்கி அல்லது அரை ஏற்றும் துப்பாக்கிகள் செயல்படும் விதம் குறித்து அ.சா–13 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்தார்.

8. அதற்கு மாறாக, மேல்முறையீட்டாளர் தனது கு.வி.மு.ச பிரிவு 313 சி கீழான அறிக்கையில் நிகழ்வுகளை மாற்றிக் கோரினார். அவர் புகார்தாரருடன் பேச்சுவார்த்தையில் இருந்ததாகவும், சம்பவத்தன்று, புகார்தாரரின் வீட்டிற்கு அவர் வழக்கமாகச் சென்றதாகவும் கூறினார். அவர் தனது கம்பில்லா பெட்டியுடன் துப்பாக்கியை மேஜையில் வைத்ததாகவும், அவருக்குத் தெரியாமல், புகார்தாரர் ஆயுதத்தை எடுத்து தவறுதலாக சுட்டதாக கூறினார். எந்தவொரு குற்றப் பொறுப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, புகார்தாரர் நிகழ்வுகளைத் தவறான பதிப்பை பதிவு செய்துள்ளார் என்று அவர் மேலும் வலியுறுத்தினார். அவர் தற்செயலாக ஆயுதத்தில் இருந்து துப்பாக்கியால் சுட்டதாக புகார்தாரர் தானே பி.சா–1 க்கு தெரிவித்ததாகக் கூறி முகேஷ் மிட்டலும் (பி.சா–1) மேல்முறையீட்டாளரின் வழக்கை ஆதரித்தார். மேல்முறையீட்டாளர் வாதிட்ட நிகழ்வுகளின் பதிவு சந்தேகத்திற்குரியதாக விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது. பி.சா–1 ஐப் பொறுத்த வரையில், அவரது குறுக்கு விசாரணையின்

போது, அந்த நிகழ்வின் போது மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு அருகில் அவர் எப்படி அல்லது ஏன் அங்கு இருந்தார் என்பதை நிரூபிக்க முடியவில்லை, அதனால் அவர் நம்பிக்கையை ஏற்படுத்தத் தவறிவிட்டார்.

9. சம்பவத்தின் போது புகார்தாரரின் குடியிருப்பு அலுவலகத்தில் மேல்முறையீட்டாளர் இருந்தாரா அல்லது அவரது பணி துப்பாக்கியில் இருந்து தோட்டா சுடப்பட்டதா என்பது குறித்து எந்த சர்ச்சையும் இல்லாததால், விசாரணை நீதிமன்றத்தின் முன் உள்ள முக்கிய கேள்வி என்னவென்றால், மேல்முறையீட்டாளர் அந்த துப்பாக்கியால் சுட்டாரா என்பதும், ஆம் என்றால், புகார்தாரரைக் கொல்லும் நோக்கத்துடன்தான் சுட்டாரா என்பதும் தான். விசாரணை நீதிமன்றம், அரசுத் தரப்பு சாட்சிகள், பெருமளவில், அரசு தரப்பை ஆதரித்ததாகவும், புகார்தாரர் ஏன் மேல்முறையீட்டாளரை பொய்யாகக் குற்றம் சாட்ட விரும்புகிறார் என்பதை நிரூபிக்க எந்த காரணமும் கூறப்படவில்லை என்றும் கூறியது. அரசுத் தரப்பு சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களில் சில முரண்பாடுகள் இருப்பதாக விசாரணை நீதிமன்றம் குறிப்பிட்டாலும், காலம்கடந்த காரணத்தால் இவை இயற்கையாகவே சிறிய முரண்பாடுகளாகவே கருதப்பட்டன. நீதிமன்றமானது எதிர்தரப்பினரின் கூற்று "பொய்கள் மற்றும் கற்பனையின் தோற்றம்" என்று கண்டறிந்தது, மேலும் அதை முழுவதுமாக நிராகரித்தது.

10. ஆயுதச் சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில், மேல்முறையீட்டாளர் தனது பணி துப்பாக்கியை எந்தவித முன் அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமான நோக்கத்திற்காக பயன்படுத்தியதாக விசாரணை நீதிமன்றம் கவனித்தது. இவ்வாறு மேல்முறையீட்டாளர் துப்பாக்கியால் சுட்டது ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 க்கு முரணானது எனக் கருதப்பட்டது. எனவே, விசாரணை நீதிமன்றம இதச பிரிவு 307 மற்றும் ஆயுதச் சட்டம் பிரிவு 27 இன் கீழ் மேல்முறையீட்டாளரைக் குற்றவாளி என்று அறிவித்து அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தது.

11. அவரது தண்டனையில் அதிருப்தி அடைந்த மேல்முறையீட்டாளர், பஞ்சாப் & ஹரியானா உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். சாட்சியங்களை மறுமதிப்பீடு செய்த உயர் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அதன் விளைவாக விதிக்கப்பட்ட தண்டனையை காலத்தையும் உறுதி செய்து, மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

12. பாதிக்கப்பட்ட, மேல்முறையீட்டாளர் இப்போது இந்த நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

<u>உள்ளடக்கங்கள் :</u>

13. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் – மாநிலத்திற்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களை கணிசமான அளவில் கேட்டுள்ளோம் மற்றும் அவர்களின் ஆவணங்களை ஆழமாக ஆராய்ந்தோம். மேல்முறையீட்டாளர் சார்பில் நான்கு முக்கிய வாதங்கள் எழுப்பப்பட்டுள்ளன. *முதலாவதாக,* புகார்தாரரைக் கொல்வதற்கு மேல்முறையீட்டாளர் சார்பில் '*நோக்கம்*' இல்லாதது. இரண்டாவதாக, எந்தவொரு தரப்பும் மீது நம்பிக்கை வைக்கப்பட்டால், தரப்பினரிடையே சிறந்த முறையில், நல்லுறவு இருந்தது மற்றும் மோசமான நிலையில் அவர்கள் அந்நியர்கள், எனவே, மேல்முறையீட்டாளருக்கு புகார்தாரரைக் கொல்லுவதற்கு நோக்கமோ அல்லது விருப்பமோ இருக்க முடியாது என்று வலியுறுத்தப்படுகிறது. *இரண்டாவதாக,* உள்நோக்கம் இல்லாதது, மேல்முறையீட்டாளரின் நடத்தையில் இருந்து குற்றம் சாட்ட முடியாது.

14. *மூன்றாவதாக,* சாட்சியங்களை மறுமதிப்பீடு செய்வதன் மூலம் மீண்டும் ஒருமுறை சந்தேகங்களை உருவாக்க முற்பட்டது, அதாவது, நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் பொருள் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இது அரசு தரப்பின்

வழக்கிற்கு ஆபத்தானது என்றும், மேலும் அ.சா–3 முதல் அ.சா–5 வரையில் உள்ள ஆர்முள்ள சாட்சிகள் புகார்தாரரின் ஊழியர்கள் என்றும் கூறப்பட்டது. மேலும், அதற்கு எதிராக, கு.வி.மு.ச பிரிவு 313 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் அறிக்கையில், அவரது கூற்று நிகழ்வுகளின் சரியான காலவரிசை மற்றும் அரசுத் தரப்பின் கதையை விட அதிகமாக நிகழ்வுகளை நம்பத்தகுந்ததாகக் கருதப்படுகின்றது என்றும் வாதிக்கப்பட்டது. *நான்காவதாக மற்றும் இறுதியாக,* மேல்முறையீட்டாளர் பயன்படுத்திய ஆயுதம் உரிமம் பெற்றிருப்பதால், ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 ன் கீழ் தண்டனை நிலையானது அல்ல என்றும், உரிமம் பெற்ற ஆயுதத்தை தவறாகப் பயன்படுத்துவது ஆயுதச் சட்டத்தின் 5–வது பிரிவின் கீழ் ஒரு குற்றம் அல்ல என்றும் வாதிடப்பட்டது.

15. மறுபுறம், கற்றறிந்த அரசு வழக்குரைஞர், இவ்வழக்கில் உண்மையைக் கண்டறியும் ஒரு வழக்கில், இந்த நீதிமன்றத்தின் தலையீட்டின் நோக்கத்தை எங்களுக்கு நினைவூட்டினார், மேலும் இந்த மேல்முறையீட்டில் எந்த கணிசமான சட்டப் பிரச்சினை ஏதும் இல்லை என்று வாதிட்டார்.

பகுப்பாய்வு:

16. பிரத்தியேகமான இரு தரப்பு வாதங்களையும் நன்கு பரிசீலித்த பிறகு, கீழ்க்காணும் இரண்டு கேள்விகள் நம்முடைய கவனத்திற்கு வருகின்றன:

அ. உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டாளருக்கு இதச பிரிவு 307 கீழ் தீர்ப்பை உறுதிப்படுத்தியதில் தவறு செய்துள்ளதா?

ஆ. ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 இன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனை தீர்ப்பு நிலைக்கத்தக்கதா?

17. அரசியலமைப்பின் 136 வது பிரிவின் கீழ் விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், இருப்பினும், சிறப்பு அனுமதி மூலம் குற்றவியல் மேல்முறையீட்டில் அத்தகைய அதிகாரங்களை கோரும் போது, இந்த நீதிமன்றம் வழக்கமாக புதிய ஆதாரங்களை மறுமதிப்பீடு செய்வதிலிருந்து விலகி, சில விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர்த்து உண்மையில் ஒரே நேரத்தில் கண்டறிதல் இருக்கும்போது சாட்சிகளின் நம்பகத்தன்மையை சந்தேகிக்கும். அது இருந்தபோதிலும் மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒரே நேரத்தில் கண்டறிதல் ஏதேனும் விபரீதத்தால் பாதிக்கப்படுகிறதா மற்றும்/அல்லது மேல்முறையீட்டாளரின் தண்டனை சட்டரீதியாகவும் உண்மையாகவும் நிலையானதா என்பதை உறுதிப்படுத்த பதிவுகளில் உள்ள முழு ஆதாரங்களையும் ஆராய்ந்து விவாதிக்க நாங்கள் முயற்சித்துள்ளோம்.

அ. இ.த.ச பிரிவு 307 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதா?

18. நாங்கள் பொருண்மையின் சூழல்களையும், சாட்சியங்களின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்கு முன், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 307 கீழ் ஒரு தண்டனையை உறுதிப்படுத்த தேவையான முக்கிய நிபந்தனைகள் பற்றிய சட்ட தீர்முடிவுகள் ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும். **மத்தியப் பிரதேச மாநிலம் எதிர் சலீம் என்ற சாமாரு மற்றும் மற்றொருவர்.,** [(2005) 5 எஸ்சிசி 554] என்ற வழக்கில், இந்த நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 307 இன் கீழ் உள்ள உண்மையான பொருளைப் மறுபரிசீலனை செய்யும் போது, பின்வருமாறு கூறியது :

> **"12. இந்த பிரிவின் கீழ் ஒரு தண்டனையை நியாயப்படுத்த, மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடல் காயம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பெரும்பாலும், உண்மையில் ஏற்பட்ட காயத்தின் தன்மை மூலம் குற்றம் சாட்டப்பட்டவரின் நோக்கத்தை கண்டறியலாம், அத்தகைய நோக்கம் மற்ற சூழ்நிலைகளிலிருந்தும் கண்டறியப்படலாம், மேலும் சில சந்தர்ப்பங்களில், காயங்களைப் பற்றி எந்த குறிப்பும்**

இல்லாமல் உறுதிப்படுத்தப்படலாம். இந்த பிரிவானது, குற்றம் சாட்டப்பட்டவரின் செயலுக்கும் அதன் விளைவுக்கும் வேறுபாட்டைக் சுட்டிக் காட்டுகிறது. தாக்கப்பட்ட நபரைப் பொறுத்த வரையில், இதுபோன்ற செயலில் எந்த முடிவும் வராமல் போகலாம், ஆனால் இந்த பிரிவின் கீழ் குற்றவாளி பொறுப்பேற்கக்கூடிய வழக்குகள் இருக்கலாம். தாக்குதலுக்கு ஆளானவருக்கு உண்மையில் ஏற்பட்ட காயம் சாதாரண சூழ்நிலையில் தாக்கப்பட்ட நபரின் மரணத்திற்கு போதுமானதாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. நீதிமன்றம் பார்க்க வேண்டியது என்னவென்றால், அந்தச் செயல், அதன் முடிவைப் பொருட்படுத்தாமல், அந்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்துடன் அல்லது அறிவாற்றலுடன் மற்றும் சூழ்நிலையின் கீழ் செய்யப்பட்டதா என்பதுதான். குற்றவியல் முயற்சி என்பது இறுதிச் செயலாக இருக்க வேண்டியதில்லை. அதை நிறைவேற்றுவதில் சில வெளிப்படையான செயலுடன் ஒரு உள்நோக்கம் இருந்தால், சட்டத்தில் அது போதுமானது.

13. சட்டப்பிரிவு 307 ன் கீழ் ஒரு தண்டனையை நியாயப்படுத்துவதற்கு, அதை நிறைவேற்றுவதில் ஏதேனும் வெளிப்படையான செயலுடன் ஒரு உள்நோக்கம் இருந்தால்

போதுமானது. மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடல் காயம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. குற்றம் சாட்டப்பட்டவரின் செயலுக்கும் அதன் முடிவிற்கும் ஏதேனும் வேறுபாடு இருந்தால், பிரிவு அதனை வேறுபடுத்துகிறது. அந்தச் செயல், அதன் முடிவு என்னவாக இருந்தாலும், அந்தச் செயலானது, அந்தச் சட்டப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்துடன் அல்லது அதை தெரிந்தோ மற்றும் பிரிவில் குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் செய்யப்பட்டதா என்பதை நீதிமன்றம் பார்க்க வேண்டும். எனவே, இ.த.ச பிரிவு 307 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படுத்தப்பட்ட காயங்கள் சாதாரண காயத்தின் தன்மையில் உள்ளது என்பதை மட்டுமே கூறி அவரை விடுவிக்க முடியாது.

(முக்கியத்துவம் பயன்படுத்தப்பட்டது)

19. இந்த கூறுகள் அனைத்தும் **மத்திய பிரதேச மாநிலம் எதிர் காஷிராம் மற்றும் பலர்[2]., [(2009) 4 எஸ்சிசி 26], ஜாகே ராம் மற்றும் பலர். எதிர் ஹரியாணா மாநிலம்., [(2015) 11 எஸ்சிசி 366] மற்றும் மத்திய பிரதேச மாநிலம் எதிர் கன்ஹா என்ற ஓம் பிரகாஷ்[4]., [(2019) 3 எஸ்சிசி 605]** போன்ற சில சமீபத்திய தீர்ப்புகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

20. இ.த.ச பிரிவு 307 ன் கீழ் ஒரு குற்றத்தை ஏற்படுத்துவதற்காக, நீதிமன்றம் தெளிவாக கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு கூறுகள் உள்ளன, *முதலாவதாக,* பாதிக்கப்பட்டவரின் மரணத்தை ஏற்படுத்த குற்றவாளிக்கு நோக்கம் அல்லது அறிவும் இருந்ததா என்பது, *இரண்டாவதாக,* பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும் அதனை பொருட்படுத்தாமல், அத்தகைய நோக்கம் அல்லது அறிவின் தொடர்ச்சியாக ஒரு வெளிப்படையான குற்றச் செயல் செய்யப்படுவதாகும். நீதிமன்றங்கள் குற்றவாளியின் நடத்தை மற்றும் குற்றத்தின் சூழ்நிலைகளிலிருந்து, பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் தன்மை அல்லது காயத்தின் தன்மை உட்பட, நீதிமன்றங்கள் அத்தகைய நோக்கத்தை கண்டறியலாம். சம்பவம் நடந்த விதம் பாதிக்கப்பட்டவரின் விவேகமான தப்பித்தலை விட அதிகமாக விளக்கலாம். இதனால் இ.த.ச பிரிவு 307 ஐ ஈர்ப்பதற்காக, பாதிக்கப்பட்டவர் தனது உயிருக்கு ஆபத்தான காயம் அடைந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

21. இதச பிரிவு 307 இன் கீழ் கொலை முயற்சி குற்றச்சாட்டை நிரூபிப்பதில் 'உள்நோக்கம்' இன்றியமையாததா என்பதை மதிப்பிடுவது இந்த கட்டத்தில் பயனுள்ளதாக இருக்கும்.

22. 'நோக்கம்' என்பது ஒரு செயலை உள்வாங்கும் அல்லது தூண்டும் 'பொருள் மற்றும் வழிமுறை என்பதிலிருந்து வேறுபட்டது என்பதைக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. 'எண்ணம்' போலன்றி, 'நோக்கம்' என்பது குற்றத்தின் அளவுகோல் அல்ல. தவறான நோக்கத்துடன் செய்த ஒரு சட்டப்பூர்வ செயல் குற்றமாக ஆகாது, ஆனால் சட்டத்திற்குப் புறம்பான செயல் நல்ல நோக்கத்துடன் செய்யப்படும்போது அது உண்மையாக இருக்காது. 'உள்நோக்கம்' கண்டறிதல் என்பது கையால் மூளை வரைபடம் தீட்டுவது போன்ற ஒரு செயலாகும். உள்நோக்கத்தை வெளிக்கொணர்வது மனிதன் தானே மூளை வரைபடைத்தை செய்வதற்கு ஒத்ததாகும். சில சமயங்களில், ஒரு 'நோக்கத்தின்' தடயங்களைக் கண்டறிவது கடினமான பணியாகிறது.

23. இந்த நீதிமன்றம் பலமுறை மீண்டும் தீர்மானித்தது:

"உள்நோக்கத்தை அரசு தரப்பு கண்டறிய முடியாவிட்டாலும், சாட்சியின் உண்மை தன்மை அல்லது நம்பகத் தன்மையை அது பிரதிபலிக்காது. சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களை பெரிதும் நம்பி இருக்கும் வழக்குகளில் உள்நோக்கத்திற்கான சாட்சி என்பது சந்தேகத்திற்கு இடமின்றி பெரிதும் தேவைப்படுவதாகும். அத்தகைய

சான்றுகள் அத்தகைய வழக்கில் சூழ்நிலை ஆதாரங்களின் சங்கிலியின் இணைப்புகளில் ஒன்றை உருவாக்கும். ஆனால் நம்பகத்தன்மையுள்ள கண்ணுற்ற சாட்சிகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் அந்த வழக்கு அவ்வாறு இருக்காது, ஆனால் அத்தகைய வழக்குகளில் கூட ஒரு நோக்கம் சரியாக நிரூபிக்கப்பட்டால், அத்தகைய ஆதாரம் அரசு தரப்பின் வழக்கை வலுப்படுத்தும் மற்றும் நீதிமன்றத்தின் இறுதி முடிவிற்கு வலு சேர்க்கும். ஆனால் உள்நோக்கம் நிரூபிக்கப்படவில்லையென்றால், கண்ணுற்ற சாட்சியின் ஆதாரம் நம்பத்தகாததாக மாற்றப்படும் என்று அர்த்தமல்ல. "

[**பார்க்க**: சிவாஜி ஜெனு மோஹிதே எதிர் மகாராஷ்டிரா மாநிலம்[5] [(1973) 3 எஸ்சிசி 219] மற்றும் பிபின் குமார் மோண்டல் எதிர் மேற்கு வங்க மாநிலம்[6] ((2010) 12 எஸ்சிசி 91)]

24. உள்நோக்கம் ஒரு முக்கிய காரணியாக மற்றும் ஒரு குற்றத்தை நிரூபிப்பதில் கணிசமான உதவியாக இருக்கும் என்று நாங்கள் கருதும் அதே வேளையில், குறிப்பாக கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் உட்பட மற்ற எல்லா காரணிகளும் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை சுட்டிக்காட்டும் வகையில்

இருக்கும் போது அது இல்லாதது, அரசு தரப்பு வழக்கின் அழிவிற்க்கு அது ஒரு முக்கிய காரணமாக ஆகாது.

25. இந்த வழக்கில், இந்த பரந்த அளவுருக்களை சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் வைத்து பார்க்கும் பொழுது, மேல்முறையீட்டாளர் எழுப்பிய கோரிக்கை எந்த உட்கருத்தும் இல்லாமல் இருப்பதைக் காண்கிறோம். புகார்தாரரைக் கொல்ல வேண்டும் என்று மேல்முறையீட்டாளரிடம் எந்த உள்நோக்கமும் இருப்பதாக அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றித் நிரூபிக்க தவறிவிட்டது, இருப்பினும், மேலே குறிப்பிட்டுள்ளபடி, உள்நோக்கம் இல்லாததால் மட்டுமே மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நிராகரிக்க முடியாது. மேல்முறையீட்டாளரின் நடத்தை புகார்தாரரை முற்றிலுமாக அகற்றும் நோக்கம் கொண்டது என்று ஊகித்த இரண்டு நீதிமன்றங்களின் ஒரே மாதிரியான முடிவில் நாங்கள் ஒருங்கிணைந்து இருக்கின்றோம், மேலும் இ.த.ச பிரிவு 307 இன் கீழ் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை முற்றிலும் நியாயமானது.

26. பின்வரும் காரணங்களுக்காக நாங்கள் அவ்வாறு கூறுகிறோம்:

முதலாவதாக, சம்பவம் நடந்த இடத்தில் மேல்முறையீட்டாளர் இருந்தது அல்லது அவரது பணித் துப்பாக்கி மூலம் தோட்டா சுடப்பட்டது என்பது மேல்முறையீட்டாளரால் மறுக்கப்படவில்லை. இருந்தாலும், திரு.பி.பாடனியா (அ.சா–13) என்பவரால் தயாரிக்கப்பட்ட 15 செப்டம்பர் 1999 தேதியிட்ட மத்திய தடயவியல் அறிவியல் ஆய்வகத்தின் (CFSL/மதஅஆ) அறிக்கை (அ.சா.ஆ. 13/ஏ) இல், புகார்தாரரின் அலுவலகத்தில் இருந்து மீட்கப்பட்ட தோட்டா மேல்முறையீட்டாளரிடமிருந்து மீட்கப்பட்ட பணித் துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டது என்பதை நிரூபிக்கிறது.

இரண்டாவதாக, மேல்முறையீட்டாளர் பக்கத்து குடியிருப்பு அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அவர் குடிபோதையில் இருந்ததாக கண்ணுற்ற சாட்சிகளான புகார்தாரர் (அ.சா–2), மலேர் சிங் (அ.சா–3) மற்றும் ஆர்.கே. சூட் (அ.சா–4) ஆகியோரின் வாக்குமூலங்கள், மருத்துவ சட்ட அறிக்கை (சான்றாவணம். ஜே எம்எல்ஆர்) மற்றும் மருத்துவர். பிதி சந்த் (அ.சா–7) ஆகியோரின் சாட்சியங்களுடன் உறுதிப்படுத்துகின்றன.

மூன்றாவதாக, தண்ணீரை உட்கொண்ட பிறகு, மேல்முறையீடு செய்தவர் தனது கைத்துப்பாக்கியை வெளியே எடுத்து, புகார்தாரரை நோக்கி அவரைக் குறிவைத்து, மலேர் சிங் மற்றும் ஆர்.கே.சூட் ஆகிய இருவரையும் அறையை விட்டு

வெளியே போகும்படி கூறியதாக புகார்தாரர் மற்றும் ஆர்.கே.சூட் (அ.சா–4) ஆகிய இருவரும் திட்டவட்டமாக சாட்சியமளித்துள்ளனர்.

நான்காவதாக, குற்ற ஆயுதம் ஒரு அரை ஏற்றி/அரை தானியங்கி கைத்துப்பாக்கி என்பதும், அது குறிப்பாக உரையிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு, புகார்தாரர் மீது குறிவைக்கப்பட்டது என்பதையும் நினைவில் கொள்கிறோம். திரு. பி. பதானியா (அ.சா–13) தனது குறுக்கு விசாரணையில், தோட்டாவைச் சுடுவதற்கு ஏதுவாக, ஆயுதத்தின் அமைப்பை கைமுறையாக பின்னோக்கி இழுத்து, ஒரு அரை தானியங்கி கைத்துப்பாக்கியை சூடும் நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று திட்டவட்டமாக கூறியுள்ளார். மேலும், புகார்தாரர் மற்றும் ஆர்.கே.சூட் (அ.சா–4) ஆகிய இருவரும், மேல்முறையீட்டாளரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிபடுத்தியுள்ளனர்.

ஐந்தாவதாக, புகார்தாரரின் வாக்குமூலத்தின்படி, அவர் குறுக்கிட்டு, மேல்முறையீட்டாளரின் கையைப் பிடிக்கவில்லை என்றால், அவரது முகத்தில் குறிவைக்கப்பட்ட துப்பாக்கி தோட்டாவை இறக்கி அதன் விளைவாக துரதிர்ஷ்டவசமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்; மற்றும்

ஆறாவதாக, மற்றும் இறுதியாக, அதற்கு மாறாக மேல்முறையீட்டாளரால் அமைக்கப்பட்ட மாற்று பதிப்பு என்னவென்றால், அவர் தனது ஏற்றப்பட்ட கைத்துப்பாக்கியை உரையிலிருந்து வெளியே எடுத்து, புகார்தாரர் விரும்பியதால் புகார்தாரரின் மேஜையில் வைத்து, அவரது பக்கம் சுற்றி விளையாட அனுமதித்தார் என்று கூறியிருப்பது நம்பமுடியாததாகத் தெரிகிறது. கு.வி.மு.ச பிரிவு 313 இன் கீழ் அவர் அளித்த அறிக்கையில், மேல்முறையீட்டாளர் தனது தரப்பு வாதத்தை, மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதற்கு பதிவில் எந்த ஆதாரமும் குறிப்பிடப்படவில்லை.

27. இதன் விளைவாகவும், மேற்கூறிய காரணங்களுக்காக, விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் மேல்முறையீட்டாளரை இதச பிரிவு 307 இன் கீழ் குற்றம் சாட்டியதில் தவறின்றி செயல்பட்டுள்ளன என்று நாம் முடிவுசெய்கின்றோம்.

ஆ. ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் தண்டனை நிலைக்கத்தக்கதா?

28. ஆயுதச் சட்டம் பிரிவு 27 இன் கீழ் மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று தீர்மானித்ததில் விசாரணை நீதிமன்றம் தவறிழைத்துள்ளதாக தெரிகிறது. ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27–ன் கீழ் குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பு ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது பிரிவு 7 ஆகிய இரண்டில் எதிராக மீறலை நிரூபிக்க வேண்டும் என்பது அவசியமானது என்பதை மறுக்க முடியாது. தற்போதைய வழக்கில், வெளிப்படையாக கூறப்படவில்லை என்றாலும், விசாரணை நீதிமன்றம் இதை ஒரு நபர் உரிமம் பெற்றிருந்தால் அன்றி எந்த நபரும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தவோ, வைத்திருக்கவோ, தயாரிக்கவோ, முதலியவற்றை செய்யக்கூடாது என்றும் மீறினால் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5–ன் மீறல் வழக்காகக் கருதியுள்ளது என்பது தெரிகிறது. அந்த சமயத்தில் அமலில் இருந்த திருத்தப்படாத ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 மற்றும் பிரிவு 27 இன் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

"5. ***ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளின் உற்பத்தி, விற்பனை போன்றவற்றுக்கான உரிமம்.*** – [(1)] எந்த நபரும்–

(அ) பயன்படுத்துதல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், மாற்றுதல், பழுதுபார்த்தல், சோதனை அல்லது நிரூபிக்க, அல்லது

(ஆ) எந்த வகை துப்பாக்கி அல்லது வேறு எந்த வகை ஆயுதங்கள் அல்லது விளக்கப்படம் அல்லது ஏதேனும் வெடிமருந்துகளை விற்பனை செய்ய அல்லது மாற்றுவதற்கு அல்லது அவர் விற்பனைக்காக வைத்திருப்பது, பரிமாற்றம், மாற்றுதல், பழுதுபார்ப்பு, சோதனை அல்லது ஆதாரம், அவர் வைத்திருக்கும் வரை இதற்காக இந்தச் சட்டத்தின் விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி வழங்கப்பட்ட உரிமம்.

[(2)] xxxx

27. ஆயுதங்கள் முதலியனவற்றை பயன்படுத்துவதற்காக விதிக்கப்படும் தண்டனை *– (1) பிரிவு 5 ல் கூறியுள்ளதற்கு முரணாக எவரேனும் ஆயுதங்களையோ அல்லது வெடி மருந்தையோ உபயோகப்படுத்தினால் மூன்று வருடங்களுக்கு குறையாமல், ஆனால் ஏழு வருடங்கள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத் தண்டனையும் மற்றும் மற்றும் அபராதம் விதிக்கப்படலாம்.*

(2) பிரிவு 7க்கு முரணாக தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் அல்லது தடைசெய்யப்பட்ட வெடிமருந்துகளைப் பயன்படுத்துபவர்களுக்கு ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனையுடன், ஆயுள் தண்டனை வரை நீட்டிக்கப்படக்கூடியது மற்றும் அபராதம் விதிக்கப்படலாம்.

(3) பிரிவு 7க்கு முரணாக தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் அல்லது தடைசெய்யப்பட்ட வெடிமருந்துகளைப் பயன்படுத்துபவர் அல்லது அதற்கு முரணான எந்தச் செயலைச் செய்தாலும், மேலும் அந்த செயலால் எவருக்கேனும் மரணம் விளைவித்தால் மரண தண்டனை விதிக்கப்படும்.

29. ஆயுதங்கள் (திருத்தம்) சட்டம், 1988 இன் படி, ஆயுதச் சட்டத்தின் 27வது பிரிவைத் திருத்துவதற்கு முன், கூறப்பட்ட விதியானது எந்தவொரு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் எந்தவொரு 'சட்டவிரோத நோக்கத்திற்காக' பயன்படுத்துவதற்கு அபராதம் விதித்தது என்பது உண்மைதான். எவ்வாறாயினும், அதன் திருத்தத்திற்குப் பிறகு, ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 ஆனது ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது 7 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதற்கு மட்டுமே பொருந்தும், மேலும் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைப்

பயன்படுத்துவதற்கான 'சட்டவிரோத நோக்கத்திற்காக' மட்டுமே இனி குற்றத்தின் பிரிக்க முடியாத அங்கமாக இருக்காது.

30. ஒப்புக்கொள்ளப்பட்டபடி, மேல்முறையீட்டாளர் சம்பவத்தின் போது ஒரு காவல்துறை அதிகாரியாக இருந்தார். மேலும் குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், தகுதியான அதிகாரியின் அனுமதி மூலம் அவருக்கு வழங்கப்பட்டதாகும். மேல்முறையீட்டாளர் அங்கீகரிக்கப்பட்ட ஆயுதத்தை வைத்திருந்ததால், ஆயுத சட்டத்தின் 5 வது பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளபடி, உரிமம் பெறாத ஆயுதத்தைப் பயன்படுத்தியதாகக் கூற முடியாது. ஆயுதத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்துதல் போன்ற பொருத்தமற்ற கருத்துக்களால் விசாரணை நீதிமன்றம் திசைதிருப்பப்பட்டதாகத் தெரிகிறது, இது சட்டத்தை மதிக்கும் குடிமக்கள் ஆயுதங்களை எடுத்துச் செல்ல அனுமதித்து ஒரு உரிமம்/ஒழுங்குமுறை வழங்குவதற்காக, மேலும், மத்திய அரசால் அங்கீகரிக்கப்படாத, சில வகை துப்பாக்கிகளை வைத்திருப்பது, கையகப்படுத்துதல், உற்பத்தி செய்தல் போன்றவற்றை தடை செய்யும் சட்டத்தின் நோக்கத்தை நோக்கி செல்வதை இழந்துவிட்டதாகத் தோன்றுகிறது,. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆயுதச் சட்டத்தின் பிரிவு 5 அல்லது 7 இன் கீழ் தவறான செயலை நிரூபிக்காமல், உரிமம் பெற்ற அல்லது

அனுமதிக்கப்பட்ட ஆயுதத்தை சட்ட விரோதமாகப் பயன்படுத்துவது பிரிவு 27 இன் கீழ் குற்றமாகாது. முக்கியமாக, இது பணி விதிகளின் கீழ் ஒரு 'தவறான நடத்தை' ஆக இருக்கலாம், அதன் தீர்மானம் விசாரணைக்கு உட்பட்டது அல்ல.

31. மேற்குறிப்பிடப்பட்ட விவாதத்தின் வெளிச்சத்தில், ஆயுதச் சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் மேல்முறையீட்டாளரை குற்றவாளி என தீர்மானித்த விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவும் மற்றும் அந்த தண்டனையை உறுதி செய்த உயர் நீதிமன்றத்தின் உத்தரவும் நியாயமற்றது மற்றும் தேவையற்றது என்பதைக் காண்கிறோம். ஆகவே ஆயுதச் சட்டத்தின் பிரிவு 27 இன் கீழான குற்றச்சாட்டிலிருந்து மேல்முறையீட்டாளர் விடுவிக்கப்படுகிறார்.

<u>இ.த.ச பிரிவு 307 இன் கீழ் தண்டனையின் அளவு</u>

32. இரு குழு தொகுப்புகளுக்கிடையேயான விகிதச் சமநிலை என்பது இப்போது விகிதாச்சார கொள்கை என்று நன்கு அறியப்படுகிறது. நமது குற்றவியல் நீதி அமைப்பில் தண்டனை கொள்கையின் அடித்தளமும் விகிதாச்சாரத்தின் கோட்பாட்டை அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இந்த தண்டனை கோட்பாடு குற்றவாளிகளை அவர்களின் சொந்த சட்டவிரோத நடத்தை

மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக தணிக்கையை மதிப்பிடும் திறன் கொண்ட முகவர்களாக உள்ளனர் என்பது அவர்களுக்கு ஒரு விகிதாசார தண்டனையை விதிப்பதன் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, 'விகிதாச்சாரம்' மதிப்பிடுவதற்கான செயல்பாடு, குற்றத்தின் தீவிரத்தைப் பொறுத்தது, இது (அ) குற்றத்தில் ஏற்பட்ட தீமை அல்லது அபாயம்; (ஆ) குற்றவாளியின் ஒட்டுமொத்த நடத்தை மற்றும்; (இ) குற்றவாளியின் நோக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், தண்டனை வழங்குவதில் பாரபட்சமான நடைமுறைகளை அகற்றும் வகையில் சமத்துவமாக நடத்தப்படுவது விகிதாச்சார விதிகளின் ஒருங்கிணைந்த அம்சமாகும். நமது அரசியலமைப்பின் 14 வது பிரிவில் உள்ளபடி, சட்டத்தின் முன் சமத்துவம் என்பது குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தையும் உள்ளடக்கியது என்பதை சொல்ல தேவையில்லை.

33. சொன்னபடி, தண்டனை வழங்குவது தொடர்பாக முழுமையான நிலைத்தன்மையை அடைவதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளன என்பதை நாம் அறியாமல் இருக்க முடியாது. தண்டனை விவகாரத்தை தீர்மானிக்கும் போது, தன்விருப்பத்தின் தன்மையுள்ள ஒரு கூறு இருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், எனினும், அந்த விருப்பத்தை முறைசார்ந்த விதத்தில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். விகிதாச்சாரத்திற்கு மீறிய தண்டனைகளை வழங்கும் நடைமுறையை, குறிப்பாக

தேவையற்ற கருணையை வெளிப்படுத்தும் நடைமுறையை இந்த நீதிமன்றம் வெளிப்படையாக நிராகரித்துள்ளது, ஏனெனில் இது சட்டத்தின் செயல்திறன் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

34. எனவே, தண்டனை கொடுக்கும் கொள்கையானது மாறிவரும் கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறது. தண்டனை அளவை முடிவுசெய்யும் போது, குற்றத்தின் தீவிரத் தன்மையைக் கவனத்தில் எடுத்து அதற்கான தண்டனை வழங்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில், தண்டனையை குறைக்கும் அடிப்படைகளையும், புனர் வாழ்வு சார்ந்த நீதிமுறையின் மற்ற வழிகாட்டி கூறுகளையும், அனுமதிக்கப்பட்ட நீதிமன்றத்தின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டு உரிய முறையில் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியம். நியாயமான மற்றும் சரியான அளவிலான தண்டனையை வழங்குவது நீதிமன்றங்களின் முக்கிய கடமையாகும், அதேசமயம் தண்டனை அளவினை தீர்மானிக்கும் போது பொருத்தமற்ற காரணங்களால் பாதிக்கப்படக்கூடாது. இயல்பாகவே, எந்தக் காரணங்கள் 'சரியானவை' அல்லது 'தவறானவை' என்பதும் ஒவ்வொரு வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழல்களையே பொறுத்தது, இதற்கு ஒரு நிரந்தர முறையை அமைப்பது சாத்தியமற்றது.

35. இந்த வழக்கின் உண்மை நிலைகளை கவனமாக ஆராய்ந்து, நாங்கள் கவனமாக எடுத்துக்கூற வேண்டிய ஒன்று என்னவென்றால், இந்த கட்டத்தில், மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனையானது அவர் செய்த குற்றத்தின் தன்மைக்கு ஏற்புடையதாக இல்லை. மேல்முறையிட்டாளரின் வாழ்க்கையின் இந்த கட்டத்தில் அவரை கடுங்காவல் சிறைக்கு உட்படுத்துவது கீழ்க்கண்ட காரணங்களால் நீதியை நிலை நாட்டாது.

அ. இந்த வழக்கில், மேல்முறையீட்டாளரின் உந்துதலின் பேரில் குற்றம் இழைக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான சாத்தியக்கூறைக் குறிக்கும் எந்தவொரு நோக்கம் அல்லது திட்டமிடும் செயல்களும் இருந்ததாக அரசு தரப்பு நிரூபிக்கவில்லை. எனவே, இவ்வகை சூழ்நிலைகளில் குற்றவாளியின் பொறுப்பு, முன்கூட்டிய தீர்மானத்துடன் செய்யப்பட்ட குற்றங்களை விட குறைவாகவே இருக்கும், ஏனெனில் திட்டமிட்ட சட்டவிரோத செயல்கள் தன்னிச்சையான சட்டவிரோத செயல்களுடன் ஒப்பிடும்போது அதிக அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியுடன் சமூகத்தின் மதிப்புகளுக்கு எதிரான தீர்மானமான தாக்குதலை குறிக்கின்றன.

ஆ. காயம் ஏர்படுத்திய நிகழ்வு நேரடியாக இதச பிரிவு 307 இன் கீழ் குற்றவாளிக்கு தண்டனை விதிப்பதில் தாக்கம் செய்யாத போதிலும், நீதிமன்றம் தண்டனை அளிக்கும் போது அதைக் கருத்தில் கொள்ளலாம். சந்தேகமின்றி, மேல்முறையீட்டாளர் செய்த குற்றம், முழுமையாக இதச பிரிவு 307 இன் கீழ் வருகிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக, புகார்தரரும் மற்ற யாரும் மேல்முறையீட்டாளரின் விரும்பத்தகாத செயலால் காயமடையவில்லை."

இ. மேல்முறையீட்டாளர் ஏற்கனவே 3 மாதங்கள் மற்றும் 19 நாட்கள் தண்டனை அனுபவித்துள்ளார். கூடுதலாக, 1999 ஆம் ஆண்டில் இந்த சம்பவம் நடந்திருந்தாலும், சம்பவத்திற்கு முன்னும் பின்னும், மேல்முறையீட்டாளர் எந்தவித விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டதாக எந்தவொரு குறிப்பும் இல்லை. இது மேல்முறையீட்டாளரின் நல்ல குணத்தை வலியுறுத்துகிறது. மேலும் இந்த சம்பவம், முடிவின் தவறு என்று பொருளாய்வு செய்யப்படலாம் என்பதைக் குறிக்கிறது. மேலும், சம்பவத்திற்குப் பிறகு மேல்முறையீட்டாளரின் தூய உள்ளம், அவர் குற்றத்திற்கு தொடர்பான சமூக அச்சுறுத்தலுக்கு எதிர்வினை அளிக்கக்கூடிய பரிசுத்தமான நபராக இருக்கிறார் என்பதைக்

குறிக்கிறது. எனவே, நீண்ட கால இடைவெளி மற்றும் சம்பவத்திற்கும் முன்னும் பின்னும் குற்றமற்ற பதிவுடன் இருந்தது, தண்டனையை மிதமானதாகக் குறைப்பதற்கான ஒரு முக்கிய காரணமாகும்."

FF. அவர் குடிபோதையில் இருந்த இந்த குறிப்பிட்ட சம்பவத்தைத் தவிர, மேல்முறையீட்டாளர் அவருக்கு ஆதரவாக பதினாறு நல்ல மேற்கோள்களுடன் களங்கமற்ற பணிப் பதிவைக் கொண்டிருந்தார். தற்போதைய குற்றச் சம்பவம் அவரை அனுமானிக்க வழிவகுக்கக் கூடியதைக் காட்டிலும், அவர் சமூகத்தின் மதிப்புமிக்க உறுப்பினராக இருந்தார் என்பதை இது குறிக்கிறது. தண்டனை வழங்கும்போது நீதிமன்றங்கள் ஒரு சமூக இருப்புநிலைக் குறிப்பை உருவாக்க வேண்டும் என்று கூறவில்லை, ஆனால் இந்த நேர்மறையான சமூக பங்களிப்புகளை தண்டனையைக் குறைப்பதற்கான காரணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உ. கடைசியாக, மேல்முறையீட்டாளர் 1999 ஆம் ஆண்டு இடைநீக்கம் செய்யப்பட்டார் என்பதும், அதன்பின் 2007 ஆம் ஆண்டில் பணியிலிருந்து நீக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. எனவே, இது தண்டனை

குறைப்பிற்க்கான ஒரு நியாயமான காரணியாகக் கருதப்பட வேண்டும், ஏனெனில் பணிநீக்கம் மற்றும் ஓய்வூதியம் போன்ற சமூகப் பாதுகாப்புப் பலன்களை இழப்பதும் சமூக தண்டனையின் ஒரு வடிவமாகவே உள்ளது.

முடிவு:

36. இதன் விளைவாகவும், முன்னறிவிக்கப்பட்ட காரணங்களுக்காகவும், குற்றவியல் மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. ஆயுதச் சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்படுகிறது. இதச பிரிவு 307 இன் கீழ் அவரது தண்டனை உறுதி செய்யப்படுகிறது. இதச பிரிவு 307 இன் கீழ் தண்டனை ஏற்கனவே அனுபவித்த காலத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் பிணையில் இருப்பதால், அவரது பிணை பத்திரங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."